**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.03/2026**

in

**அசல் வழக்கு எண்.353/2015**

இசக்கிமுத்து
(அவரது அதிகார முகவரும் மகளுமான
பாரதி கலை செல்வி மூலம்) ... மனுதாரர்/2ம் வாதி

/எதிர்/

1. பாலம்மாள்
2. சுப்பையா
3. பட்டாணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 12.06.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.தங்கமணி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், இம்மனுவிற்கு No Counter petition may be allowed and terms and conditions என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு, அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 3 விதி 2 பிரிவு–ன் கீழ், மனுதாரர் கடந்த 31.03.2026ம் நாள் தனது மகளாகிய பாரதி கலைச்செல்விக்கு ஏற்படுத்தி கொடுத்த பொது அதிகார

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.03 18:22:24 +0530

ஆவணத்தை அங்கீகரித்து அதன் அடிப்படையில் வழக்கை 2ம் வாதியின் பொது அதிகார முகவராக தொடர்ந்து மேல்நடத்திக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், தாவா அசல் வழக்கானது தபசில் சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கேட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கின் 2வது வாதியாகிய மனுதாரர் தனது முதுமையின் காரணமாகவும், நியாபக மறதி, உடல் சோர்வு, பயணம் செய்ய இயலாத நிலை ஆகியவற்றாலும், மனுதாரருக்கு போதிய கண் பார்வை இல்லாமல் குறைபாடு உள்ளதாலும், வழக்கில் மனுதாரரால் தனது தரப்பில் சாட்சியம் அளிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், இதன் காரணமாக மனுதாரர் கடந்த 31.03.2026 அன்று தனது மகளாகிய பாரதி கலைச்செல்விக்கு அசல் வழக்கு நடவடிக்கைகளை பொறுத்து பொது அதிகார முகவர் என்ற நிலையில் ஆவணங்களில் கையெழுத்து செய்யவும், வழக்கறிஞர் நியமனம் செய்யவும் நீதிமன்றத்தில் தனது சார்பில் ஆஜராகவும், சாட்சியம் அளிக்கவும் வழக்கு சார்ந்த ஆவணங்கள் பரிசீலனைக்கு வழக்கறிஞரிடம் கொடுத்து வாங்கவும், மேல் முறையீடு, சீராய்வு, மறு ஆய்வு போன்ற மனுக்கள் தாக்கல் செய்யவும், இதர வழக்கு சார்ந்த அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பொது அதிகார ஆவணம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் தனது மகள் வழக்கை மேல்நடத்த மனுதார் ஏற்படுத்திக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் அதிகாரம் பெற்றுள்ளார் என்றும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை என்றும், ஆகையால், மனுதாரர் கடந்த 31.03.2026ம் நாள் தனது மகளாகிய பாரதி கலைச்செல்விக்கு ஏற்படுத்தி கொடுத்த பொது அதிகார ஆவணத்தை அங்கீகரித்து அதன் அடிப்படையில் வழக்கை 2ம் வாதியின் பொது அதிகார முகவராக தொடர்ந்து மேல்நடத்திக் கொள்ள அனுமதியளித்து

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.03 18:22:31 +0530

உத்தரவிடவேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter petition may be allowed and terms and conditions என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது, மனுதாரர் கடந்த 31.03.2026 ம் நாள் தனது மகளாகிய பாரதி கலைச்செல்விக்கு ஏற்படுத்தி கொடுத்த பொது அதிகார ஆவணத்தை அங்கீகரித்து அதன் அடிப்படையில் வழக்கை 2ம் வாதியின் பொது அதிகார முகவராக தொடர்ந்து மேல்நடத்திக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரரால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், மனுதாரரால் இம்மனுவுடன் 31.03.2026 தேதியில் மனுதாரரால் தனது மகள் பாரதி கலைச்செல்வி என்பவருக்கு

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.03 18:22:39 +0530

எழுதிக்கொடுத்த அதிகார ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) அசல் வழக்கில் வாதிக்காக பொது அதிகார முகவர் நிலமையில் வாதியின் மகளான பாரதி கலைச்செல்வி என்பவரை வழக்கை மேல்நடத்த வேண்டும் என்பதற்கு மனுதாரரால் மனுவில் சொல்லப்படும் காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

9) இருப்பினும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொது அதிகார ஆவணத்தில், மனுதாரரின் மகளான பாரதி கலைச்செல்விக்கு மனுதாரருக்காக சாட்சியம் அளிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், மனுதாரரின் பொது அதிகார முகவர் மனுதாரருக்குப் பதிலாக சாட்சியம் அளிக்க சட்டப்படி தகுதியுடையவரா? அவ்வாறு அளிக்கப்படும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதா? என்பது, சாட்சிய விசாரணை நடைபெறும் கட்டத்தில், அப்போது எழுப்பப்படும் ஆட்சேபனைகள் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் தனியாக பரிசீலித்து முடிவு செய்யப்பட வேண்டிய விஷயமாகும்.

10) ஆகையால், மேற்கண்ட பரிசீலனைகளின் அடிப்படையில், மனுதாரரால் 31.03.2026 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ள பொது அதிகார ஆவணத்தை இவ்வழக்கிற்காக மட்டிலும் அங்கீகரித்து, மனுதாரரின் மகளான பாரதி கலைச்செல்வியை மனுதாரரின் பொது அதிகார முகவர் என்ற நிலையில், இவ்வழக்கின் அனைத்து நடைமுறைகளையும்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.07.03 18:22:46 +0530

சட்டப்படி மேல்நடத்த அனுமதி வழங்கப்பட்டு இம்மனுவில் இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

**<u>11) இறுதியாக</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. மனுதாரரால் 31.03.2026 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ள பொது அதிகார ஆவணத்தின்படி, மனுதாரரின் மகளான பாரதி கலைச்செல்வி, மனுதாரரின் பொது அதிகார முகவர் என்ற நிலையில் அசல் வழக்கினை மேல்நடத்த அனுமதிக்கப்படுகிறார். தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.07.03 18:22:53 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–** இல்லை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.07.03 18:22:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.03/2026
in
O.S.No.353/2015
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 03.07.2026**